## ✠ கல்வியைப் பற்றி

இம்மைபயக்குமால் ஈயக் குறைவின்றால்

தம்மைவிளக்குமாய் தாமுளராக் கேடின்றால்

எம்மையுலகத்தும்; யாம்காணோம் கல்விப்போல்

ம்மமா் அறுக்கும் மருந்து.

**<u>இதன் விளக்கம்:</u>**

கல்வி என்பது இவ்வுலகத்தில் இன்பத்தைத் தரும். பிறா்க்குத் தருவதால் அது குறையாது. கற்றவா்கள் புகழை எங்கும் பரவச்செய்யும்.

தாங்கள் உயிரோடு இருக்கும்வரை அழியாது. ஆதலால் எந்த உலகத்திலும் கல்வியைப் போல அறியாமையைப் போக்கும் மருந்தை யாம் கண்டதில்லை என்று கூறுகிறாா்கள்.

✠ கல்வி கரையில் கற்பவா் நாள்சில

மெல்ல நினைக்கின் பிணிபல - தென்னதின்

ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்

பாலுன் குருசின் தெரிந்து

**இதன் விளக்கம் :**

**கல்விக்கு முடிவில்லை. ஆனால் கற்பவருடைய வாழ்நாட்கள் சில, சற்று பொறுமையாக நினைத்துப் பார்த்தால் அந்த சில வாழ்நாட்களிலும் பிணிகள் பலவாக இருக்கின்றன. ஆதலால் நீரை நீக்கிப் பாலை பருகும் அன்னப் பற்வைப் போல அறிவுடையார் நூலின் தன்மைகளை அறிந்து நல்ல நூல்களையே கற்பர்.**

## ✠ கல்வி கற்றுக் கொடுப்பவர்

**தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்**

**காணிற் கடைப்பட்டான் என்றிகழார்**

**காணாய் அவன்துனையா ஆறுபோய் அற்றேநூல்**

**கற்று மகள்துணையா நல்ல கொளல்.**

**இதன் விளக்கம் :**

படகு செலுத்துபவனைப் பழமையான சாதிகளில் கீழ்ச்சாதியைச் சார்ந்தவன் என இகழமாட்டார்கள் மேலோர்கள் நீ காண்பாயாக! அப்படகை ஓட்டுபவனின் துணை கொண்டு ஆற்றைக் கடப்பது போலாகும். நல்ல சாத்திரங்களைக் கற்றவனின் துணை கொண்டு நூல் கல்வி பொருளை கற்றல் வேண்டும்.

✠ இதன் மூலம் கல்வி என்பது இவ்வுலகத்தில் இன்பத்தைத் தரும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல கல்வியையும் உலக ஞானத்தை வளர்க்கக் கூடிய கல்வியும் அளிக்க வேண்டும் என்றும், இந்தக் கல்வியை கற்று கொடுப்பவர். நான் மேற்கூறிய பாடல் வரிகளின்படி நல்ல சாத்திரங்களையும், நூல் பொருள் கற்றவராய் இருத்தல் வேண்டும். உலக ஞானம், மெய் ஞானம் பெற்றவராய் இருத்தல் வேண்டும். இவர்களிடம் நல்ல கல்வியைப் பெறமுடியும். இன்றைய உலகில் வணிக நோக்கத்துடன் கல்வி கற்றுக் கொடுத்து வருகிறார்கள். ஆகையால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல கல்வியைப் பெற்றுத் தருதல் வேண்டும்.